சார்பு நீதிமன்றம், விருதுநகர்

O.S.No:56/2019 Date: 11.09.2023.

பிரதிவாதி தரப்பு சாட்சி(Dw2) வாக்குமூலம் (1872ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144வது பிரிவின் படி திரு.M.ஆறுமுகம், கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முத்தையா | சாதி | : -- |
| த/பெ | : ராமசாமி | சமயம் | : -- |
| கிராமம் | : துலுக்கப்பட்டி | தொழில் | : |
| தாலுகா | : விருதுநகர் | வயது | : 48 |

<u>முதல் விசாரணை–</u>

நான் இவ்வழக்கில் 6ம் பிரதிவாதி ஆவேன். 5ம் பிரதிவாதி எனது மனைவி ஆவார். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை என் சாட்சியத்தின் ஒரு பகுதியாக வாசித்துக்கொள்ள வேண்டுகிறேன். 17.08.2018ம் தேதியிட்டு 1ம் பிரதிவாதி எனது மனைவியான 5ம் பிரதிவாதிக்கு இயற்றிக்கொடுத்த பணப்பற்று ரசீது அசல் **பி.வா.சா.ஆ.1.** ( சாட்சி இந்த ஆவணத்தில் தரப்பினர் இல்லை என்பதால் 2ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) 17.08.2018ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி எனக்கு இயற்றிக்கொடுத்த பணப்பற்று ரசீது அசல் **பி.வா.சா.ஆ.2.** பிராதை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.